**செய்தி வெளியீடு எண்: 159** **நாள்: 02.03.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 1.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவன வளாகத்தில் 12 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் 18 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 பாலங்களை திறந்து வைத்தார்கள்.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், சாலை வசதிகள், பாலங்கள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பழுதடைந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவன வளாகத்தில் 12 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் காளம்பாளையம் சீலியூர் சாலையை இணைக்கும் வகையில் 1 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் புஜங்கனூர் நஞ்சேயகவுண்டன்புதூர் சாலையை இணைக்கும் வகையில் 1 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம்;

காஞ்சிபுரம் மாவட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில் போந்தூர் வாயலூர் சாலையை இணைக்கும் வகையில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் தென்பாக்கம் சாலையில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓடு பாலம்; உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், சிலாம்பாக்கம் அனுமந்தண்டலம் சாலையை இணைக்கும் வகையில் 1 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம்;

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மேலூர் சாலையையும் கங்கைகொண்டான் கொல்லனூர் சாலையையும் இணைக்கும் வகையில் 4 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் தெற்குபுத்தாற்றின் குறுக்கே மருங்கூர் நெய்குப்பை சாலையில் 1 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் வளப்பாற்றின் குறுக்கே மருங்கூர் நெய்குப்பை சாலையில் 1 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பேச்சிப்பாறை வெட்டிமுறிச்சான் சாலையை இணைக்கும் வகையில் 4 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம்;

என மொத்தம் 30 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு பல்நோக்கு கட்டடம் மற்றும் 9 பாலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.3.2018**